# அழகு படுத்தும் பாடு

பேராசிரியர், சொல்லழகர் ஸ்ரீ உ. வே.

K. A. மணவாளன் M. A., B. O. L.

கடல் சூழ்ந்த இந்நிலவுலகில் அழகுக்கு அடிமையாகாதவர் எவரும் இல்லை. யாவரையும் அடிமைப்படுத்தவல்ல அழகினைப் பெற்று வாழ்ந்த உயரிய தலைவன் இராமபிரானேயாவான். அவன் வடிவழகில் ஈடுபட்டு மெய்மறந்து நின்ற முனிவர்களையும் அரசர்களையும் காணும்போது பெண்களைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? இவ்வுண்மையைக் கண்டறிந்த கல்வியிற் பெரியராய கம்பர், தமது வாக்குப் பயன்பெற வேண்டுமென்ற கருத்தினாலேயே ஸ்ரீராமபிரானைக் கதாநாயகனாகக் கொண்ட இராம காதையைப் பாடினார். இனி அவ்விராமாயணத்தில் இராமனது வடிவழகில் ஈடுபட்ட சிலரைக் காண்போம்.

தசரதன் ஸ்ரீராமனைவிட்டுச் சிறிதும் பிரிந்திருக்கமாட்டான். அத்தகைய தசரதன் ஒரு சமயம் அவையில் அமர்ந்திருக்கும்போது இராமனை உடனே காணவேண்டுமென்று ஆசைப்பட்டான். சுமந்திரனிடம் சொல்லி மைந்தனை வரவழைத்தான். இராமன் தன் எதிரே வரும்போது அவனது முன்னழகிலும் முகப்பொலிவிலும் ஈடுபட்டு மகிழ்ந்தான். அவன் முன்னழகில் ஈடுபட்ட தசரதன் அவ்விராமனது பின்னழகையும் நடையழகையும் காண்பதற்காகத் தன்னருகே வந்த ராமனை 'போ' என்று சொல்லிவிட்டான். இராமன் திரும்பிச் செல்லும்போது திரும்பவும் இராமா! வா என்று அழைத்தான். இவ்விதம் வா என்றும் போ என்றும் பலமுறை சொல்லி அவன் நடையழகையும் திருமேனியின் வடிவழகையும் ஒளியையும் பருகினான் தசரதன் என்பதை "வா போகு வா இன்னம் வந்தொருகால் கண்டு போ" என்று குலசேகராழ்வார் அருளிய பாசுரத்தால் அறியலாம். தந்தையையும் வடிவழகு படுத்தும் பாடு இது!

இனி வேட்டுவனாகிய குகன் ஈடுபட்ட திறப்பினைக் காண்போம். பிராட்டியோடு பெருமான் இளையபெருமாள் பின்தொடரக் காட்டிற்கு எழுந்தருள்கிறார். செல்லும் வழியில் கங்கையின் வடகரையில் குகன் என்னும் வேடர் தலைவன் மீனையும் தேனையும் காணிக்கையாக ஏந்தித் தன் சுற்றத்தாரோடு வந்து தொழுகின்றான். அக்குகனின் அன்பின் பெருக்கையும், பக்தியையும் கண்டு அதிசயித்த இராமபிரான், 'சீதை

யை நோக்கித் தம்பி திருமுகம் நோக்கித் தீராக் காதலனாகும்' என்று முகம் மலர்ந்து அவனை முதலில் நண்பனாக ஏற்றுக் கொண்டான். அயோத்திமா நகரத்தை விட்டுக் கானகம் வந்த காரணத்தை இலக்குவன் சொல்லக்கேட்ட குகன், மனமுடைந்து வருந்தினான். பிறகு அன்றிரவு இராமபிரான் கல்லிடைப்படுத்த புல்லில் தேவியுடன் துயில, அந்நிலை நோக்கிக் கண்களிலின்றும் அருவிபோல் கண்ணீர்பாயக் கைவில் ஏந்தி இரவு முழுவதும் இலக்குவனாகிய தம்பி காத்துநின்றான். பஞ்சணையில் பள்ளிகொள்ளவேண்டிய பரமன் வெறுந் தரையில் பிராட்டியோடு படுத்திருப்பதையும், மற்றோரரசகுமாரனாகிய இலக்குவன் எம்பிரானுக்கு நேர்ந்த நிலை எண்ணி மனம் வெம்பிக் கொதித்துக் கண் கொட்டாமல் கையும் வில்லுமாய் பாதுகாத்திருப்பதையும் கண்ட குகனும் கண்களிலின்றும் நீர் பெருகத் தொடுத்தவில்லுடனும் விழித்த கண்ணுடனும் இரவு முழுவதும் காத்துநின்றான். தலைவனாகிய இராமன் தனித்து உறங்கத் தம்பி வில்லேந்தி நடப்பதையும், குகன் தொடுத்த வில்லுடன், அவனடியிட்ட அடியில் தான் அடியிட்டு நிற்பதையும், அதைக் கண்டு வேடர் கூட்டம் சுற்றி வருவதையும் ஏன் என்று காண்போம்.

ஒரு கால் இவ்விளையவனாகிய இலக்குவனால் இராமபிரானுக்கு என்ன தீங்கு நேருமோ என்று இளைய பெருமாளையும் சந்தேகிக்கிறான் குகன். "நடுக்கோத்துப் பிடித்த வில்லும் தாமுமாய் நடையாடும் மதிள் போலே" வளைய வருகிற இளைய பெருமாளையும் சந்தேகிக்கக் காரணம் என்ன? ஊரில் ஒரு தம்பியாகிய பரதன் தாயைக் கொண்டு கட்டின காப்போடே பெருமாளைக் காட்டிற்கு ஓட்டினான். இந்த இலக்குவனும் அவனைப் போன்ற வேறொரு தம்பியல்லவா? தனிமையில் என்ன தீங்கு செய்யக் கருதியோ இப்படி ஆயத்தனாய் நிற்கிறான் என்று சந்தேகித்து வில்லும் கோலுமாய்க் கொண்டு, இலக்குவன் இட்ட அடிகளிலே அவனுக்குத் தெரியாமல் அடியிட்டு நடந்து காத்தானாம் குகன். குகனைச் சூழ்ந்துள்ள வேடர்களோ இந்த இருவரையுமே சந்தேகிக்கின்றனர்: ஏனெனில் இலக்குவனோ தாயாதியாவான். குகனோ காட்டில் வாழும் வேடனாவான் இவர்கள் இருவரும் இந்த இராமபிரானுக்கு என்ன தீங்கு செய்ய நினைத்தோ இப்படித் திரிகின்றனர் என்ற ஐயமே! இங்ஙனம் ஐயுற்றுத் தனித்தனியே, கையும் வில்லுமாய்க் கொண்டு பெருமாளைக் காத்து நின்றனர். இங்கு "ஒரு நாள் முகத்திலே விழித்தவர்களையும் வடிவழகு படுத்தும் பாடாயிற்று இது" என்கிற ஸ்ரீவசன பூஷணத்தையும் அதற்கு மிக அழகாக வியாக்கியானம் வகுத்த விசதவாக் சிகாமணிகளான ஸ்ரீ மணவாள மாமுனிகளின் கருத்தையும் ஒருங்கே நோக்க வேண்டும்.

இதேபோன்று இராமபிரானது வடிவழகிலீடுபட்ட சூர்ப்பணகையின் வரலாற்றையும், இராம பாணத்தால் அடிபட்டு வீழ்ந்த நிலையில் வாலி பேசிய பேச்சையும் காண்போம். இராம லட்சுமணர், சீதையோடு பஞ்சவடியில் வசித்துவருகிறபோது, இராவணனுடைய தங்கையாகிய சூர்ப்பணகை இராமனது திருமேனி அழகைக் கண்டு மிகவும் வியந்து மன்மதனே என்று ஐயுறுகின்றாள். பின்பு மன்மதனுக்கு வடிவமில்லையே! அவன் அநங்கனன்றோ! என்று துணிந்து இந்திரனே, சிவபெருமானே, திருமாலோ என்றெல்லாம் ஐயுறுகின்றாள். பின்பு அவள் அவ்விராமபிரானின் அவயவங்களின் சௌந்தரியங்களைப் பலவாறு வருணித்து முடிவில் அதர மாதுர்யத்தைப் பற்றிப் பேசுகின்றாள். உலகில் அதரத்திற்கு (உதடுக்கு) செம்மை பற்றிப் பவழம் சிறந்த உவமையாக எடுத்துக் காட்டப்படுகின்றது. அதனினும் மேலான இராமபிரானது அதரத்துக்கு எதைத்தான் உவமையாகக் கூறுவேன் என்று புகழ்ந்துள்ளாள். இவ்விதம் இராமன் வடிவழகில் ஈடுபட்டு மனம் மாறிக் காம பரவசையாய் அவள் பட்ட பாட்டினைக் கூறவும் வேண்டுமோ? நிலை தடுமாறிய சூர்ப்பணகை இலக்குவனால் மான பங்கஞ் செய்யப்பட்ட நிலையில், தான் விரும்பியபடி இராமனை அடைய முடியவில்லையே என்ற ஏக்கத்துடன் இலங்கையை அடைந்தாள். அவள் இன்பத்திற்கு இடையூறாக நின்ற சீதையின் பேரழகைப் பற்றிக் கூறி இராவணனுக்குக் காமத்தீயை மூட்டினாள். இராவணனும் நிலை தடுமாறினான்.

கரனையும் மறந்தான் தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான் உற்ற பழியையும் மறந்தான் வெற்றி
அரனையும் கொண்ட காமன் அம்பினால் முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான் கேட்ட மங்கையை மறந்திலா தான்.

அன்றிரவு அவன் உறங்கவே இல்லை. அப்பேயிருளில் அவன் கண் முன் ஒரு பெண் உருவம் ஒளிவீசி வந்தது. ஆம்! அவ்வுருவத்தை அவன் சீதை என்றே கருதினான். உடனே சூர்ப்பணகையை வரவழைத்தான். உறக்கமின்றித் தவிக்கும் சூர்ப்பணகையும் அங்கு வந்து சேர்ந்தாள். அவளை நோக்கி இதோ என்முன் நிற்கும் இப்பேரழகிதானே நீ சொன்ன சீதை என்று கேட்டான். ஆனால் அச்சொற்கள் அவள் காதில் விழவே இல்லை. இரவும் பகலும் தான் நினைந்து கொண்டிருக்கும் ஒரு ஆண் உருவத்தையே அவள் கண்டாள். உடனே அவள் கூறுகின்றாள்:—

"செந்தாமரைக் கண்ணொடும் செங்கனி வாயினொடும்
சந்தார்தடந் தோளொடும் தாழ்தடக் கைகளோடும்

அந்தார் அக லத்தொடும் அஞ்சனக் குன்றமென்ன
வந்தான்இவன் ஆகும் அவ்வல் வில்இராமன் என்றாள்''

செந்தாமரைக் கண்ணும், செங்கனி வாயும், திரண்ட தோளும், நீண்ட தடக்கைகளுமாய் நீல மலை போன்ற மேனியழகனான இராமன் இதோ என் முன்னே நிற்கின்றான் என்று பேசுகிறாள். அவன் பெண் உருவம் பற்றிக் கேட்க இவள் ஆண் உருவத்தை வருணித்தாள். இதனால் இராமன் வடிவழகு படுத்திய பாட்டை அறியலாம்.

இனி வாலி இராமனைப் புகழுமாறு எவ்விதம் என்பதனை விளக்குவோம். இராம பாணத்தால் தாக்குண்ட வாலி கீழே விழுகிறான். மார்பினின்றும் இரத்த வெள்ளம் பெருகத் துளைத்துள்ள அந்த அம்பைப் பறித்தெடுத்தான். அந்த அம்பில் பொறிக்கப்பட்டுள்ள 'ராம' என்னும் செம்மை சேர்நாமந் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான். கண்டபின் பழிக்கலுற்றான். இல்லறம் துறந்த நம்பியும், வில்லறம் துறந்த வீரனுமாகிய நீ தோன்றலால் தொல்லறம் துறந்திலாத சூரியன் மரபும் தன் நல்லறம் துறந்தது என்று எண்ணி நகையாடுகின்றான். இப்படியெல்லாம் பலவாறு வெகுளியினால் இராமனைப் பழித்த அதே வாலி, தன்னை மறைந்து பாணத்தால் அடித்த இராமனை ஏசுகின்ற போதும், இராமன்பால் மதிப்பும் அன்பும் கொண்டுள்ளவனாதலால் அவன் செய்கைக்கு நியாயம் காட்டுவதைப் போல "ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த தேவியைப் பிரிந்த பின்னை, திகைப்பினால் அறிவு கலங்கி இக்காரியத்தைச் செய்தாய் போலும்" என்று கூறுகின்றான் ஸ்ரீராமபிரானின் வடிவழகைக் கண் படைத்த பயனாகக் கண்டு களித்தவனாதலின் அடிபட்ட நிலையிலும் இராமனை "ஓவியத்தெழுத வொண்ணா உருவத்தாய்" என்று விளிக்கிறான். சித்திரத்திலும் இராமபிரானது திருமேனி அழகை உள்ளபடி எழுத முடியாது என்பதன்றோ இதனால் அறியக் கிடக்கின்றது.

எனவே அரசர்களாலும், காட்டிலுள்ள வேடர்களாலும், வானரங்களாலும், அரக்கியாலும் இராமன் பெருமையோடு போற்றப்பட்டானென்றால் அதற்கு அவன் வடிவழகன்றோ காரணம்! இவர்களையெல்லாம் ஆட்டிப் படைத்தது இராமனது வடிவழகாதலால் அழகு படுத்தும் பாட்டை ஒருவாறு தெளியலாம்.